## 14-12-2019 அன்று நடைபெற்ற கட்டிடத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்த சிறப்பு விருந்தினர்கள், நன்கொடையாளர்கள், நண்பர்கள், உறவினர்கள், மற்றும் பெற்றோர்கள்.



சர்வதேச பாராலிம்பிக் போட்டியில் வெற்றிபெற்ற
**T.** சித்தார்த்தனை கௌரவிப்பவர் **Dr.** புகழகிரி வடமலையான் அவர்கள்,
நிர்வாக இயக்குனர், வடமலையான் மருத்துவமனை, மதுரை



சிறப்பு கைப்பிரதியின் முதல் பிரதியை வெளியிடுபவர்
திரு.**J.**ரிஷ்வந்த் அவர்கள், செயல் இயக்குனர், ஜே.ஸி.ரெஸிடென்சி, மதுரை
அதனை பெற்றுக் கொள்பவர் **Er.K.**இளங்கோ பாக்யராஜ் அவர்கள்,
நிர்வாக இயக்குனர், மேக்ஸ் ப்ராப்பர்ட்டீஸ் ( பி ) லிட்., மதுரை,

### வாழ்த்துரை வழங்கிய சிறப்பு விருந்தினர்கள்



**Dr.P.** மகேந்திரவேல் அவர்கள்,
நிர்வாக இயக்குனர், பெரீஸ் பிஸ்கட்ஸ், மதுரை



சிறப்பு விருந்தினர்கள்



**S.** செந்தில் ஆனந்தன் அவர்கள்,
பொது மேலாளர், தமிழ்நாடு மெர்கென்டைல் வங்கி,
தூத்துகுடி



குழுப் பாடல் பாடும்
பள்ளி மாணவ, மாணவியர்கள்



கட்டிட திறப்பு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள்



வெற்றிபெற்ற சித்தார்த்தனை
கௌரவிக்கும் சக மாணவர்கள்




## பெத்சான் சிறப்பு பள்ளி

( அறிவுத்திறன் குறைந்த மாற்றுத்திறனாளிகளுக்கானது )
தமிழக அரசின் அங்கீகாரம் பெற்றது & மத்திய அரசின் பதிவு பெற்றது
828, சிக்கந்தர் சாவடி, மதுரை - 625 018.
Phone : 0452 - 2 660 770 ; 98949 28666
E-mail : bethshanschool@gmail.com Web : www.bethshanschool.org
F : www.facebook/bethshanschool


# நிகழ்வுகள்

2019 - ஆண்டு அறிக்கை

BETHSHAN
SPECIAL SCHOOL

## முதல் தள கட்டிட திறப்பு விழா



கட்டிடத்தை திறந்து வைத்து சிறப்பித்தவர்கள்
திரு.M.R.S.பிரபாகரன் மற்றும் திருமதி. பவானி அவர்கள்
M.R.சிவமுருக நாடார் & ராஜம்மாள் குடும்பம், மதுரை



கல்வெட்டினை திறந்து வைத்து சிறப்பித்தவர்கள்
திரு.R.S.ராஜசேகர் மற்றும் திருமதி.A.R.ஹேமலதா அவர்கள்
தேனி பிளைவுட்ஸ், தேனி.

*பேரன்புடையீர்,*

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் பெத்சான் சிறப்பு பள்ளியின் வாழ்த்துக்கள். உங்களின் தன்னலமற்ற உதவியானல் பெத்சான் சிறப்பு பள்ளியானது கடந்த 23 ஆண்டுகளாக அறிவுத்திறன் குறைந்த மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு சேவைகளை சிறப்பாக செய்துவருகிறது. கடந்த 2019 ஆம் ஆண்டு பள்ளியில் நடைபெற்ற பல்வேறு நிகழ்வுகளை ஆண்டறிக்கையாக தொகுத்து உங்களோடு பகிர்ந்து கொள்வதில் பெரு மகிழ்ச்சியடைகிறோம்.

நீங்கள் இந்தக் குழந்தைகளின் வாழ்விற்காக செய்துவரும் ஒவ்வொரு உதவிகளையும் கடவுள் நிச்சயம் அங்கீகரித்து அதற்குரிய பலன்களை தந்து உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் ஆசிர்வதிப்பார்.

உங்கள் அனைவருக்கும் எங்களது இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகள்.

நன்றி.

சமூக சேவையில்
R. ரவிக்குமார்
முதல்வர்



## 2019 அபுதாபியில் நடைபெற்ற சர்வதேச சிறப்பு ஒலிம்பிக்கில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களுக்கு பாராட்டு விழா

1. இ.திவ்யபாரதி - இறகு பந்து
   ஒற்றையர் பிரிவில் தங்கப் பதக்கம் மற்றும்
   இரட்டையர் பிரிவில் வெள்ளிப் பதக்கம்.
2. ம.ஜெயஸ்ரீ - சைக்கிள் பந்தயம்
   500 மீ. ரோடு ரேஸ் வெள்ளிப் பதக்கம் மற்றும்
   2 கி.மீ. சைக்கிள் பந்தயத்தில் வெண்கலப் பதக்கம்.
3. த.மனோஜ்குமார் - இந்திய கூடைப்பந்து அணி - வெள்ளிப் பதக்கம்
4. பா.தினேஷ் - சைக்கிள் பந்தயம் - வெண்கலப் பதக்கம்
5. சி.சந்தியாதேவி - தடகளம் 100 மீ - வெண்கலம்



சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு கிருபாகரன் அவர்கள் வெற்றி பெற்ற பெத்சான் சிறப்பு பள்ளி விளையாட்டு வீரர்களை பாராட்டி கௌரவிக்கிறார்கள், உடன் அமெரிக்கன் கல்லூரி முதல்வர் திரு.M.தவமணி கிறிஸ்டோபர், மதுரை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்க செயலாளர் வழக்கறிஞர் திரு. K.சாமிதுரை, பள்ளியின் தலைவர் திரு.R.ஜெயசீலன், முதல்வர் திரு.R.ரவிக்குமார் மற்றும் ஒருங்கிணைப்பாளர் திரு.A.ஜெயபால் அவர்கள் மற்றும் சிறப்பு விருந்தினர்கள்.

ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற சர்வதேச பாராலிம்பிக் குளோபல் கேம்ஸில் 20 கி மீ. சைக்கிள் பந்தயத்தில் வெண்கலப் பதக்கம் வென்ற வீரர் தி.சித்தார்த்தன்.





### மண்டல கருத்தரங்கு




பல்வகை குறையினால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான கற்றல் உத்திகளை உருவாக்கும் முறை பற்றி மண்டல அளவில் நடைபெற்ற கருத்தரங்கினை சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரியின் மனநல துறை மருத்துவர் Dr.அஷ்மா JA பாட்ஷா அவர்கள் கருத்தரங்கினை துவக்கி வைத்து பேசிய போது

### தேசிய கருத்தரங்கு






மாற்றுத்திறனாளிகள் நல உரிமைச் சட்டம் - 2016 தேசிய அளவில் நடைபெற்ற கருத்தரங்கில் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி புகழேந்தி அவர்கள் சிறப்புரையாற்றினார்கள். கருத்தரங்கில் பங்குகொண்ட சிறப்பு கல்வியாளர்கள்.



மாணவர்கள் உழவர் சந்தையில் காய்கறிகளின் விலையறிந்து வாங்குகின்றனர்.



மாணவர்கள் கண்ணன் பலசரக்கு கடையில் பொருள்களை வாங்குகின்றனர்.



10, அக்டோபர் 2019
உலக மனநல நாள்
கருப்பொருள்
Keep Me In Your Heart






### உலக மனநல நாள்

அறிவுத்திறன் குறைந்தோர்களுக்கு அனுதின செயல்களை கற்றுத் தருவது எப்படி என்னும் புத்தகத்தின் முதல் பிரதியை திரைப்பட இயக்குனர், திரு.கரு.பழனியப்பன் அவர்கள் வெளியிட, அதன் முதல் பிரதியை சிவகாசி, லவ்லி ஆப்செட் பிரிண்டர்ஸ் (பி) லிட்., நிர்வாக இயக்குனர் திரு. க.செல்வக்குமார் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். முதல் பதிப்பில் 2000 புத்தகங்களை இலவசமாய் நமக்கு அச்சிட்டு உதவி செய்தவர் சிவகாசி, லவ்லி ஆப்செட் பிரிண்டர்ஸ் ( பி ) லிட்., நிர்வாக இயக்குனர் திரு. க.செல்வக்குமார் அவர்கள். முன்னதாக 18 ஆம் ஆண்டு நிகழ்வாக உலக மனநல நாளன்று மதுரை மாவட்டத்தில் உள்ள அனைத்து சிறப்பு பள்ளி மாணவர்களுக்கான விளையாட்டு போட்டிகளை ஜே.ஸி.ரெஸிடென்ஸி ஹோட்டலுடன் இணைந்து நடத்தினோம். இப்போட்டிகளை மதுரை ரவுன் டேபிள் - 14 சங்க சேர்மன் திரு, ரகுராம் அவர்கள் துவக்கிவைத்து வாழ்த்துரை வழங்கினார்கள். மாலையில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு பாராட்டுச் சான்றிதழையும், பரிசையும் மதுரை மண்டல வைப்பு நிதி ஆணையர் திரு. கோபாலகிருஷ்ணன் அவர்கள் வழங்கினார்கள். உடன் மதுரை மீனாட்சி ரோட்டரி சங்க நிர்வாகிகள் உள்ளனர்.





கொடைக்கானால் மலைப்பகுதியில் மகிழ்ச்சியுடன் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தும் மாணவர்கள்



கொடைக்கானலில் உள்ள வானிலை ஆராய்ச்சி மையத்தில் சூரியன், சந்திரன் மற்றும் கோள்கள் பற்றி விளக்குகிறார் மைய அதிகாரி திரு.எபினேசர் செல்லச்சாமி அவர்கள்



மதுரை ஆனமலைஸ் டெயோட்டா கார் விற்பனை மற்றும் சர்வீஸ் செய்யுமிடத்தை மாணவர்கள் பார்வையிட்டபோது




